**சுருக்கம்**

பணிக்குழு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – திருவாளர்கள் எஸ். வெங்கடேஷ் மற்றும் என். நடராஜன் அயற்பணி அடிப்படையில் சேலம் மாநகராட்சியில் பணியமர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

அரசாணை (பத்தாண்டு) எண்.296 நாள்:01.07.2009.

படிக்கப்பட்டது:

(1) அரசாணை (இருபதாண்டு) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.05.2008.
(2) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண். 17720/09/எப்4, நாள் 08.06.2009.

-------

ஆணை:–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், சேலம் மாநகராட்சியில் பல்வேறு திட்டப் பணிகளை விரைவாக செயல்படுத்திட பிற பணியிடங்களுடன் இரண்டு செயற்பொறியாளர் பணியிடங்களும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தோற்றுவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1) பணியாளர் செலவினம் சேலம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். திட்டச் செலவிலிருந்து மேற்கொள்ளப்படக் கூடாது.
2) பணியாளர் மொத்த செலவினம் சேலம் மாநகராட்சி வருவாயில் 49% மிகாமல் இருப்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.
3) பணியிடங்கள் இரண்டாண்டுகளுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும். இரண்டாண்டுகளுக்குப் பிறகு கலைத்துவிட வேண்டும். திட்டப்பணிகளை அந்த காலக்கட்டத்துக்குள் முடித்துவிட வேண்டும்.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சேலம் மாநகராட்சி ஆணையர் வளர்ச்சி பணிகளுக்கான அனுமதி அளிக்கப்பட்ட பணியிடங்களில் இரண்டு செயற்பொறியாளர்களை நிரப்ப கோரியதற்கிணங்க மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அயற்பணி அடிப்படையில் பூர்த்தி செய்ய கீழ்க்கண்ட செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

| வ. எண். | செயற்பொறியாளரின் பெயர் | தற்போது பணிபுரியும் இடம் | மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் |
|---|---|---|---|
| 1. | திரு எஸ். வெங்கடேஷ் | நகராட்சி பொறியாளர் நிலை–1, உதகமண்டலம் | செயற்பொறியாளர் (திட்டம்) சேலம் மாநகராட்சி (அயற்பணி அடிப்படையில்) |
| 2. | திரு என். நடராஜன் | நகராட்சி பொறியாளர் நிலை–2, மேட்டூர் | செயற்பொறியாளர் (திட்டம்) சேலம் மாநகராட்சி–பதவி உயர்வில் (அயற்பணி அடிப்படையில்) |

மேலும், மேற்கண்ட இரு பொறியாளர்களும் அவர்களது சுய விருப்பத்தின் பேரில் மாற்றப்படுவதால், அவர்கள் பயணப்படி பெற தகுதியற்றவராகிறார்கள் என்றும், மாநகராட்சிப் பணிக்கு செயற்பொறியாளர் பணியிடம் வகுப்பு-1ன்கீழ் வருவதால் இதற்கு நியமன அதிகாரி அரசு என்பதாலும், அரசு தான் நியமனம் செய்ய வேண்டியுள்ளது என்றும், சேலம் மாநகராட்சியின் திட்டப் பணிகள் தொய்வின்றியும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியுள்ளதாலும் அவசர அவசியம் கருதி மேற்படி செயற்பொறியாளர் பணியிடம் அயற்பணி அடிப்படையில் பூர்த்தி செய்ய அரசின் உத்தரவினைக் கோரியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு ஏற்று சேலம் மாநகராட்சியில் வளர்ச்சிப் பணிகளுக்கான அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் கீழ்க்கண்ட பொறியாளர்களை அரசாணை (இருபதாண்டு) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.05.2008-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு சுய விருப்பத்தின் பேரில் மாற்றப்படுவதால் அவர்களுக்கு பயணப்படி வழங்கப்பட மாட்டாது என்ற நிபந்தனையுடன் அயற்பணி அடிப்படையில் சேலம் மாநகராட்சியில் பணியமர்த்தி அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | செயற்பொறியாளரின் பெயர் | தற்போது பணிபுரியும் இடம் | மாறுதல் செய்யப்படும் இடம் மற்றும் பதவி |
|---|---|---|---|
| 1. | திரு எஸ். வெங்கடேஷ் | நகராட்சி பொறியாளர் நிலை-1, உதகமண்டலம் | செயற்பொறியாளர் (திட்டம்) சேலம் மாநகராட்சி (அயற்பணி அடிப்படையில்) |
| 2. | திரு என். நடராஜன் | நகராட்சி பொறியாளர் நிலை-2, மேட்டூர் | செயற்பொறியாளர் (திட்டம்) சேலம் மாநகராட்சி-பதவி உயர்வில் (அயற்பணி அடிப்படையில்) |

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை - 600 005.
ஆணையர், சேலம் மாநகராட்சி, சேலம்.
ஆணையர், உதகமண்டலம் நகராட்சி,
உதகமண்டலம்.
ஆணையர், மேட்டூர் நகராட்சி, மேட்டூர்.

நகல்:-
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை - 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை - 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1/7/2009
பிரிவு அலுவலர்.
1/7/09